*8*

# தேவனுடைய குரலைப் பின்பற்றுதல்

*ரோமர் 6:17ல் பவுல், ஒருகாலத்தில் பாவத்திற்கு அடிமைகளாக இருந்த ரோமர்கள் "[அவர்களுக்கு] ஒப்புவிக்கப்பட்ட உபதேச சட்டத்திற்கு அவர்கள் மனப்பூர்வமாய்க் கீழ்ப்படிந்திருந்ததினாலே" தமது நன்றிகளைச் சொல்விளக்கப்படுத்தினார். ரோமர் 10:17ல் அவர், "விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்" என்று எழுதினார். இவ்விரு வசனங்களும் வேதாகமத்தின் பின்வரும் முக்கியமான கொள்கையொன்றின்மீது நமது கவனத்தைக் குவிக்கின்றன: விசுவாசத்தினால் வாழுதல் என்பது தேவனுடைய குரலைக் கவனித்துக்கேட்டு அதற்குப் பதில்செயல் செய்தலாகவும், பின்பு அவர் கூறுவதைச் செய்தலாகவும் உள்ளது. வேதவசனங்கள் மௌனமாக இருக்கும் விஷயங்கள் மீது நாம் தேவனுடைய குரலைப் பின்பற்றுவது எவ்வாறு?*

## வேதவசனங்களின் மௌனத்தைக் கையாளுதல்

*வேதாகமம், நாம் எதிர்க்கொள்ளச் சாத்தியமான ஒவ்வொரு சூழ்நிலையையும் அல்லது நடைமுறையையும் குறிப்பிடுவதில்லை. உதாரணமாக, கி.பி. முதல் நூற்றாண்டில் இருந்து ஏற்படுத்தப்பட்டுள்ள தொழில்நுட்ப மேம்பாடுகளின் வெளிச்சத்தில் கிறிஸ்தவர்கள் எவ்வாறு வாழவேண்டும்? ஒரு மோட்டார் வாகனத்தைப் பாதுகாப்பாக இயக்குதல் பற்றிய கிறிஸ்தவரின் பொறுப்புப் பற்றி வேதாகமத்தில் எவ்விடத்திலும் வெளிப்படையாக (நேரடியாக) கூறப்படுவதில்லை. இது, நாம் பிரியப்படுகிற விதமாக வாகனத்தை ஓட்ட நாம் சுயாதீனம் கொண்டிருக்கிறோம் என்று அர்த்தப்படுகிறதா? வேதாகமத்தைத் தீவிரமாகப் படிக்கும் மாணவர் எவரும் அப்படிப்பட்ட விஷயத்தைக் கூறமாட்டார். நமது உடமைகளை நாம் எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்று வேதாகமம் கூறுகிறது, மற்றும் அது நாம் குடிமை அரசுக்குக் கீழ்ப்படியவேண்டும் என்றும் கூறுகிறது (காண்க ரோமர் 13:1-7). இவ்விரு கொள்கைகளுமே, ஓட்டுநர்கள் என்ற வகையில் நாம் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பதற்குச் சில வழிகாட்டுதல்களை மறைமுகமாகக் குறிப்பிடுகின்றன.*

*வேதாகமம் வாகனத்தை ஓட்டுவது எவ்வாறு என்ற பாடக்கருத்தின் மீது மௌனமாக இருப்பதாக ஒரு கருத்தில் நாம் கூறமுடியும், ஏனெனில் அது வாகனங்ளைப் பற்றி வெளிப்படையாக (நேரடியாக) குறிப்பிடுவதில்லை. இருப்பினும், அது நாம் வாகனத்தை ஓட்டும்போது நமது நடக்கை பற்றித் தேவனுடைய சித்தம் அமைதியாக உள்ளது என்று அர்த்தப்படுவதில்லை. விசுவாசத்தினால் வாழ்வதற்கு நாம், வேதவசனங்களின் பின்வரும் தெளிவான ஆனால் அடிக்கடி உரைக்கப்பட்டிராத பண்பைப் புரிந்துகொள்ளவேண்டும்:*

தேவன் அடிக்கடி, குறிப்பிட்ட சூழ்நிலைகளுக்கு நடைமுறைப் படுத்தப்படவேண்டிய பொதுவான கொள்கைகளின் பயன்பாடுகள் மூலமாகப் போதிக்கிறார். வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், சில போதனை மறை முகமாகக் கூறப்படுகிறது.

இந்த உதாரணத்தில் இருந்து கற்றுக்கொள்ளப் படவேண்டிய பாடமானது, விசுவாசத்தினால் வாழ்வது எவ்வாறு என்று புரிந்துகொள்ள நாடும் வேதாகம மாணவர்களினால் எப்போதும் பாராட்டப்பட்டிருப்பதில்லை. வேதவசனங்கள் மௌனமாக இருக்கும்போது என்ன செய்வது என்பது பற்றிக் கருத்து வேறுபாடுகள் எழுகின்றன. சபையில் இசை பற்றிய கேள்வியானது மாறு பட்ட நிலைப்பாடுகளை நன்கு விவரிக்கிறது. சபை ஆராதனையில் ஒரு இசைக்கருவியைப் பயன்படுத்தவோ அல்லது அதைத் தவிர்க்கவோ வேண்டும் என்று புதிய ஏற்பாடு ஒருக்காலும் வெளிப்படையாகக் குறிப்பிடுவதில்லை. இந்த அமைதியானது, அப்படிப்பட்ட கருவிகளைப் பயன்படுத்தும் சுயாதீனத்தை நமக்குப் பெற்றுத் தருகிறதா? அது அவ்வாறு பெற்றுத் தருகிறது என்று ஒரு குழுவினர் கூறுகின்றனர். அனுமதி இன்மை என்பது கருவிகள் பயன்படுத்தப்படக்கூடாது என்று அர்த்தப்படுகிறது என்பதாக இன்னொரு குழுவினர் வலியுறுத்துகின்றனர். இந்த இரண்டாவது கண்ணோட்டமே சரியானதாக இருக்கும் என்று நான் நம்புகிறேன். ஏன்?

## அமைதி என்பது அனுமதியைத் தருகிறதா?

ஒரு நடைமுறையைப் பற்றி வேதாகமத்தின் அமைதி என்பது, நாம் விரும்புகிற எதையும் செய்து கொள்ளலாம் என்று அர்த்தப்படுவதாகச் சிலர் நினைக்கின்றனர். வேறுவார்த்தைகளில் கூறுவதென்றால், இந்தக் கண்ணோட்டமானது, வேதாகமம் வெளிப்படையாகத் தடைசெய்யாததால் அது அனுமதிக்கிறது என்று கூறுகிறது. ஜேக் கோட்ரெல் என்பவர், நடைமுறையில் இந்தக் கண்ணோட்டம் எதை அர்த்தப்படுத்துகிறது என்று சரியாய்க் காண்பித்துள்ளார்: "இது ... ஒரு குறிப்பிட்ட விஷயம் பற்றித் தேவன் சட்டம் எதுவும் இயற்றி இட்டிராத இடத்தில், நாம் அவ்விஷயத்தைக் கேட்டுகொள்ளவோ அல்லது தடைசெய்யவோ, அவ்விஷயத்தின் மீது எவரொருவரின் மனச்சான்றிற்கும் சட்டம் இயற்ற முயற்சி செய்யக்கூடாது என்று அர்த்தப்படுகிறது."[1] இந்த நிலைப்பாடு சீர்பொருத்தமாகப் பராம ரிக்கப்பட இயலாது என்பதே இடர்பாடாக உள்ளது.

முதலாவதாக, இந்தக் கண்ணோட்டம் தர்க்கரீதியாகச் சீர்பொருத்தமற்றதாக உள்ளது. ஒலன் L. ஹிக்ஸ் என்பர் பின்வருமாறு இதை விரித்துரைத்தார்:

> [குறிப்பாகத் தடைசெய்யப்பட்டிராத எந்த விஷயத்தையும் அனுமதிக்கும்] இந்தக் கொள்கையானது, அதன் நிறைவான முடிவிற்குத் தள்ளப்பட்டு, ஒவ்வொரு மனிதரும் மீண்டும் தமக்குத்தாமே பிரமாணம் ஆகும்-வகையில், தேவனை ஆராதிப்பதில் மனிதர் விரும்பும் எந்த விஷயத்தையும் அனுமதிக்கும். சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுதல் மற்றும் சபையானது தனது தூய்மையில் காக்கப்படுதல் ஆகியவை செய்யப்பட வேண்டுமென்றால், இதைப்போன்ற ஒரு கொள்கையானது அனுமதிக்கப்படக்கூடாததாக உள்ளது.[2]

சில வேளைகளில், ஒரு நிலைபாட்டின் தர்க்கரீதியான விஷயத்தைக் கவனிக்கும்போது நாம், "மிக அதிகமானதை நிரூபிக்கும் விஷயம் ஒன்றையும் நிரூபிப்பதில்லை" என்ற கூற்றைக் கேள்விப்படுகிறோம். அது அவ்விடத்தில் நடைமுறைப்படுகிறது. வேதாகமத்தின் நல்ல மாணவர் ஒருவர், வேதவசனங்களில் வெளிப்படையாக ஒருக்காலும் தடைசெய்யப்படாதிருந்தும். தேவனுடைய சித்தத்திற்கு ஒருக்காலும் இசைவிணக்கம் அற்றதாக உள்ள எண்ணற்ற செயல் களைப் பற்றிச் சிந்திக்க முடியும். உதாரணமாக, ஆராதனை அனுபவத்தை மேம் படுத்துவதற்கு நாம் போதையூட்டும் மருந்துகளைப் பயன்படுத்த முடியுமா? அப்படிப்பட்ட விஷயமானது ஒருக்காலும் தடைசெய்யப்பட்டிருக்கவில்லை. இயேசுவின் சரீரம் மற்றும் இரத்தம் ஆகியவற்றின் அடையாளங்களுக்குப் பதிலியாக நாம் கர்த்தருடைய இராப்போஜனத்தில் ரஸ்குகளையும் டீயையும் கொடுக்கலாமா? அவைகள் தடைசெய்யப் பட்டிருப்பதில்லை. வேதவசனங்களில் அமைதி என்பது அனுமதி போன்றது என்று கருதப்படக் கூடாது. இப்படிப்பட்ட சிந்தனையானது அதன் தீர்க்கரீதியான முடிவுகளை நோக்கி நெருக்கப்படும் போது, கர்த்தருடைய அதிகாரத்துவத்தை மும்முர மானதாக எடுத்துக்கொள்ளுபவர்களால் ஏற்றுக் கொள்ளப்படாததாக இருக்கும் செயல்களின் திரளுக்குக் கதவைத் திறக்கிறது. இருந்தபோதிலும், தேவனை ஆராதிப்பதில் இசைக்கருவிகளைப் பயன்படுத்துதல் போன்ற இந்தக் கருத்துக்களை வேதாகமரீதியாக ஆதரிக்கும் விஷயங்கள் நிறைய உள்ளன.

"அமைதியிலிருந்த விவாதம்" என்பதற்கான தர்க்கரீதியான பிரச்சனை ஒன்று மட்டுமே இதன் சிரமமாக இருப்பதில்லை. இந்த கண்ணோக்கம், தேவனு டைய இயல்பு மற்றும் அவர் எப்போதும் தம் மக்களிடம் நடந்துகொண்டுள்ள முறை ஆகியவை பற்றி வேதாகமம் போதிக்கும் விஷயத்திற்குச் சீர்பொருத்தம் அற்றதாகவும் உள்ளது. F. லாகார்டு ஸ்மித் என்பவர், நம்மை இந்த முடிவிற்கு வழிநடத்தும் போதனைகளின் பயன்நிறைந்த தொகுப்புரை ஒன்றைப் பின்வரு மாறு எழுதினார்:

> எந்த ஒரு பதிவேடும் அதிகாரத்துவமுள்ளதாக உயர்த்திப் பிடிக்கப்படும்போதெல்லாம், அதன் அமைதிக்கான மதிப்பும் நிலவ *வேண்டும்,* இல்லையென்றால் அந்த வசனத்தை அதிகாரத்துவம் உடையதாக ஏன் கருதவேண்டும்? ஒரு பதிவேடு அதன் அமைதி யில் கனம்பண்ணப்படுவதில்லை என்றால், அது ஒரு மாறுபட்ட பதி வேடாக - மனித வேலைகள் மற்றும் கண்டுபிடிப்பு ஆகியவற்றினால் உருவாக்கப்பட்ட பதிவேடாக - உள்ளது, அதில் *கூறப்படாதவற்றை* நாமே "கோடிட்ட இடங்களில் நிரப்பிக் கொள்கிறோம்." கடைசியில் அம லாக்கப்பட்ட பதிவேட்டிற்கு நாம் உதடுகளினால் ஆராதனை செய்தாலும், அது தோற்றகாலத்தியது போல் இருப்பதில்லை.
>
> இஸ்ரவேல் மக்களின் ஆராதனை பற்றிய விஷயங்களில் தரப்பட்ட குறிப்பிட்ட சில அறிவுறுத்துதல்களில், அமைதியானது பணிசெய்யும் கொள்கையை நாம் காணுகிறோம். உதாரணமாக, தேவன் மிருகபலிகளை, விசேஷித்த பண்டிகைகளை மற்றும் தசம பாகத்தைக் கொடுக்கும்படிக் குறிப்பாகக் கேட்டுக் கொண்டிருந்தபடியால், இஸ்ரவேல் மக்கள் ஆராதனையில் வேறு வடிவங்களை அறிமுகப்படுத்தத் தாங்கள் சுயாதீனம்

*கொண்டிருப்பதில்லை என்று சரியாய்ப் புரிந்துகொண்டிருந்தனர். தேவனுடைய மகிமையை நோக்கி சூடான கரியின்மீது நடத்தல் என்பது தாழ்மையான நொறுங்குண்டிருந்தலாக இருந்திருக்கலாம், ஆனால் அது ஆசரிப்புக் கூடார ஆராதனை பற்றிய தேவனுடைய சித்தத்தைப் பிரதிபலிப்பதாக இராது.*

*மீளக்கட்டுவித்தலின் இயக்கமானது அமைதியின் அதிகாரத்துவத்தைக் கண்டுபிடித்தது என்று நாம் நினைத்தால், நாம் தவறானவர்களாக இருக்கிறோம். உண்மையில் அமைதியின் அதிகாரத்துவமானது அதிகமாக வேதாகமரீதியானதாக இருக்க இயலாது. இஸ்ரவேல் மக்கள், மோசேக்குக் கொடுக்கப்பட்ட பிரமாணங்களில் இருந்து ஒன்றையும் குறைக்கவோ அல்லது அதனுடன் ஒற்றையும் கூட்டவோ கூடாது* [*உபாகமம் 12:32*] *என்று கூறப்பட்டதைக் காட்டிலும் அதிகமாக அறிவுறுத்தலாக எது இருக்க முடியும்? கொரிந்தியர்களின் இறுமாப்பு மற்றும் பிரிவினைக்காகப் பவுல் அவர்களைக் கடிந்துகொண்டபோது, அவர் இதே கருத்தைக் குறிப்பிட்டார்: "எழுதப்பட்டதற்கு மிஞ்சி எண்ணவேண்டாம்"* [*1 கொரிந்தியர் 4:6*].[3]

*அமைதி என்பது அனுமதி அளிக்கிறது என்ற கருத்து வேதாகமத்தின் போதனையைப் பிரதிநிதித்துவப் படுத்துவதில்லை. எனவே நாம், இந்தக் கண்ணோக்கமானது விசுவாசத்தினால் நாம் தேவனுக்காக வாழுதலுக்கான நமது தாகத்தில் நமக்கு உதவ இயலாது.*

## தேவனுடைய குரலுடன் ஒட்டிக்கொண்டிருத்தல் மூலம் - "எழுதப்பட்டதற்கு மிஞ்சி எண்ணவேண்டாம்"

*தேவனை ஆராதிப்பதில் நாம் செய்யும் ஒவ்வொரு விஷயத்திலும் தேவனுடைய குரலில் இருந்து நாம் அதிகாரத்துவத்தைப் பெற்றிருக்க வேண்டும். நாம் இந்த அதிகாரத்துவத்தைக் கொண்டிராத, ஆனால் தேவன் கூறியுள்ளதற்கும் அப்பால் செல்லும்போது, நாம் தவறான யூகத்துடன் செயல்படுகிறோம். தேவனுடைய சித்தம் அறியப்பட்டு நடைமுறைப் படுத்தப்படவேண்டும் என்று நோக்கங்கொண்ட அவர் தமது சித்தத்தை வெளிப்படுத்தினார், மற்றும் எல்லா மக்களும் அந்த சித்தத்தைக் கற்றுக் கொண்டு அதற்குக் கீழ்ப்படியும் பொறுப்பைக் கொண்டுள்ளனர். வேதவசனங்கள் "கர்த்தருடைய வார்த்தையின் மீது பலத்த வலியுறுத்தம்" செய்யும் காரணத்தினால் நாம் இந்தக் கொள்கைகளை நம்புகிறோம்.[4] மக்கள் கர்த்தருடைய வசனத்தைக் கேட்டு அதற்குக் கீழ்ப்படும்படி எதிர்பார்க்கப்படுகின்றனர் என்பது வேதாகமத்தில் அடிக்கடி உரைக்கப்பட்ட போதனைகளில் ஒன்றாக உள்ளது (ரோமர் 6:17; யாக்கோபு 1:22).*

*தேவன் தமது மக்களிடத்தில் எப்போதுமே இவ்வாறுதான் செயல்பட்டிருக்கிறார். ஏசாயா தமது காலத்தில் இருந்த மக்கள் தேவனைக் கனப்படுத்தத் தவறிய வேளையில் அவர்களை எதிர்கொண்டபோது, அவர்கள் தேவனிடத்தில் இருந்து கேள்விப்பட்டிருந்தவற்றைப் பின்பற்றியிருக்க வேண்டும் என்று அவர்களுக்கு நினைவூட்டினார். "இதை நீ அறியாயோ? இதை நீ கேட்டதில்லையோ?" என்று அவர் கேட்டார் (ஏசாயா 40:28). ஏசாயா 1ம் அதி*

*காரத்தில் அவர், மக்கள் கர்த்தரை மறந்து விட்டனர் என்று குற்றம் சாட்டினார் மற்றும் அவர்கள் அவரது வார்த்தையைத் திரும்பவும் கேட்டு தங்கள் பாவத்தைத் திருத்துவது அவசியம் என்றும் அவர் கூறினார் (காண்க ஏசாயா 1:4, 10).*

*ஓசியா தீர்க்கதரிசி இதே எச்சரிக்கையை ஒலித்தார். அவர், மக்கள் பாவம் செய்திருந்தனர் மற்றும் மக்களினம் என்ற வகையில் அழிக்கப்படுதலின் விளிம்பில் இருந்தனர் என்ற தேவனுடைய குற்றச்சாட்டை எடுத்துரைத்தார். பின்பு அவர், இப்படிப்பட்ட ஒரு அபாயகரமான நிலைக்குள் அவர்கள் விழுந்தது ஏன் என்று விளக்கினார்:*

> *என் ஜனங்கள் அறிவில்லாமையினால் சங்காரமாகிறார்கள்; நீ அறிவை வெறுத்தாய், ஆகையால் நீ என் ஆசாரியனாயிராதபடிக்கு நானும் உன்னை வெறுத்து விடுவேன், ஆகையால் நானும் உன் பிள்ளைகளை மறந்து விடுவேன் (ஓசியா 4:6).*

*மக்கள் தேவனுடைய குரலைக் கவனித்துக் கேட்காத காரணத்தினால் இஸ்ரவேல் அழிக்கப்பட்டது. மக்கள், எழுதப்பட்டதற்கு மிஞ்சி எண்ணாதபடிக்கு எச்சரிப்பதில் இஸ்ரவேலரின் நியாயப்பிரமாணம் உறுதியாக இருந்தது என்று தீர்க்கதரிசிகள் புரிந்து கொண்டிருந்தனர்.*

*மற்றும், ஒரு விஷயத்தில் தேவனுடைய அமைதி என்பது நாம் மிகச்சிறந்தது என்று நினைக்கும் விஷயத்தைச் செய்ய நமக்கு அனுமதி உள்ளது என்று அர்த்தப்படுவது இல்லை என்று புதிய ஏற்பாடு விவரிக்கிறது. இந்த போதனையை நாம் எபிரெயர் 7ம் அதிகாரத்தில் காணுகிறோம், அதன் எழுத்தாளர் பிற்பாடு, தமது வாசகர்கள் கிறிஸ்துவைப் பின்பற்றுவதற்கான தங்களின் உறுதிப்பாட்டில் உண்மையாய் நிலைத்திருக்கும்படி தாம் வேண்டுகோள் விடுத்ததில், "புத்திமதி யான வார்த்தைகள்" (எபிரெயர் 13:22) என்று குறிப்பிடுவதை இந்த அதி காரத்தில் கொடுத்தார். அந்த புத்திமதியின் ஒருபாகம் என்ற வகையில் அவர், மத்தியஸ்தர் என்ற வகையில் இயேசுவின் மேன்மைத் தன்மையைக் காண்பித்தார். இந்த மேன்மைக்த் தன்மைக்கு, இயேசுவின் ஆசாரியத்துவம் ஒரு காரணமாக இருந்தது. அவர் மனிதர்களுக்காகச் செய்கிற ஊழியத்தினால் அவர் ஒரு ஆசாரியராக இருக்கிறார் என்பது தெளிவாகிறது. இருப்பினும் அவரது ஆசாரியத்துவம், மோசேயின் நியாயப்பிரமாணத்தின் கீழ் ஆரோனின் குடும்பத்தின் வழித்தோன்றலாக அல்ல, ஆனால் ஆதியாகமம் 14ம் அதிகாரத்தில் சுருக்கமாக வரலாறு எடுத்துரைக்கப்பட்ட மெல்கிசேதேக்கினுடையதைப் போன்றதாக இருந்தது. எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர் வலியுறுத்தி யபடி, மெல்கிசேதேக்கு ஆபிரகாமை ஆசீர்வதித்தார், இது அவர் ஆபிரகாமுக்கு மேலானவர் என்பதை மறைமுகமாக உணர்த்தும் செயலாக இருந்தது. இஸ்ரவேலின் ஆசாரிய வம்சத்தவரும் ஆபிரகாமின் வழித்தோன்றலுமான லேவியும்கூட மெல்கிசேதேக்குக்கு கீழானவாக இருந்தார். இவ்வாறாக, இயேசு மெல்கிசேதேக்கின் முறைமைப்படி ஆசாரியராக இருந்தார் என்று கூறுதலானது, இயேசு லேவி கோத்திர ஆசாரியர்களுக்கு மேலானவராக இருந்தார் என்று கூறுதலான இருந்தது (எபிரெயர் 7:1-10).*

*இருப்பினும், இயேசு மோசேயின் நியாயப்பிரமாணத்தின் கீழ் ஒரு ஆசாரியராக இருந்திருக்க இயலாது என்று எழுத்தாளர் உரைத்தார்.*

ஏன்? எனென்றால் அவர் வேறொரு கோத்திரத்தில் வழித்தோன்றலாக உதித்தார். "நம்முடைய கர்த்தர் யூதா கோத்திரத்தில் தோன்றினாரென்பது பிரசித்தமாயிருக்கிறது; *அந்தக் கோத்திரத்தாரைக் குறித்து மோசே ஆசாரியத்துவத்தைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லையே*" (எபிரெயர் 7:14; என்னால் வலியுறுத்தப்படுகிறது). நியாயப்பிரமாணமானது, யூதா கோத்திரத்தில் இருந்து யாரையேனும் மோசேயின் ஆசாரியத்துவத்திற்குச் சேர்த்துக்கொள்வதை வெளிப்படையாகக் *கண்டனம் செய்ய*வில்லை என்பதல்ல, ஆனால் அது [நியாயப்பிரமாணம்] அதைப் பற்றி [யூதா கோத்திரத்தில் இருந்து யாரையேனும் ஆசாரியத்துவத்திற்குத் சேர்த்துக்கொள்வதைப் பற்றி] *ஒன்றும் கூறுவதில்லை* என்பதே எழுத்தாளரின் விவாதமாக உள்ளது. லேவி கோத்திரத்தில் இருந்தே ஆசாரியர்கள் வரவேண்டியிருந்தது என்று ஒருமுறை குறிப்பிட்டபின்பு, யூதா அல்லது வேறு எந்த கோத்திரத்தில் இருந்தும் ஆசாரியர்கள் நியமிக்கப்படுதலைத் தடைசெய்ய வேண்டிய அவசியம் இராதிருந்தது. தேவன் பேசியிருந்தார். அவரது வார்த்தைக்கு அப்பால் செல்லுதல் என்பது தவறான யூகத்தில் நடத்தலாக இருந்தது, எனவே அது பாவமாக இருந்தது. யூதா கோத்திரத்திலிருந்து ஒருவரும் ஆசாரியராயிருக்க முடியாதிருந்தது - அது தடைசெய்யப்பட்டதாயிருக்க முடியாதிருந்தது - அது தடைசெய்யப்பட்டதாயிருந்தது என்பதால் அல்ல, ஆனால் அது அங்கீகரிக்கப்படாததால் அவ்வாறு இருந்தது.

தேவனுடைய மக்கள், வேதவசனங்களின் அமைதியை, தாங்கள் செய்ய விரும்பிய எதையும் செய்வதற்கான அனுமதியாக விளக்கப்படுத்தவில்லை, ஆனால் அதன் அமைதியை அவர்கள், நியாயப்பிரமாணத்தை மாற்று வதற்கான அதிகாரம் குறைவுபடுதல் என்ற வகையில் கண்ணோக்கினார். இந்தக் கொள்கையானது, மிருகபலிகள், விசேஷித்த பண்டிகைகள் மற்றும் தசமபாகம் ஆகியவற்றிலும் மோசேயின் உடன்படிக்கையில் ஆசாரியத்துவத்திலும் நடைமுறைப்படுத்தப்பட்டது. தேவனுடைய அதிகாரம் பற்றிய அவரது சித்த மானது, அவரது மக்கள் அவரது குரலை மதிக்க வேண்டும் மற்றும் அதற்கு அப்பால் சென்றுவிடக்கூடாது என்பதாகவே எப்போதும் இருந்துள்ளது.

## முடிவுரை

தேவன், தமது மக்கள் தமது வார்த்தைக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்று எதிர்பார்க்கிறார். அதன் எல்லைகளுக்குள் நாம் வாழ்ந்து, எழுதப்பட்டவற்றுடன் ஒன்றைக் கூட்டவோ அல்லது அதில் இருந்து ஒன்றை எடுத்துப் போடவோ கூடாது என்று அவர் நம்மிடத்தில் விரும்புகிறார். யாரேனும் ஒருவர் தவறான முன் யூகத்துடன் தேவன் அறிவித்தவற்றிற்கு அப்பால் செல்லும்போது, அவர் அதில் பிரியமற்றவராகிறார்.

எனவே விசுவாசத்தில் வாழுதல் என்பது, தேவனுடைய அதிகாரமுள்ள குரலுக்கு கவனம் கொடுத்தலாக உள்ளது. சில வேளைகளில் தேவன் குறிப்பிட்ட சில செயல்களைத் தடைசெய்துள்ளார், ஆனால் எவ்வாறு வாழ்வது என்று கூறுதலே வேதவசனங்கள் முழுவதிலும் அவரது பொதுவான அணுகுமுறையாக இருந்துள்ளது. அவரது ஞானத்தில் அவர், எது மிகச்சிறந்தது என்று அறிந்தி ருக்கிறார். அவரது அன்பில் அவர் அதை அளிக்கிறார். சில விஷயங்களை ஒரு குறிப்பிட்ட வகையில் செய்யும்படி அவர் நமக்குக் கூறுகிறபோது - அதை நாம் புரிந்துகொண்டாலும் இல்லை என்றாலும் - அவரது வழியில் அதைச்

*செய்தல் நமது மிகச்சிறந்த ஆர்வத்திற்குரியதாக உள்ளது என்பதில் நாம் நிச்சயமாயிருக்க முடியும். தேவன் தமது வார்த்தையிலிருந்து எடுத்துப் போடுதல் அல்லது அத்துடன் ஒன்றைக் கூட்டுதல் ஆகியவற்றினால் அதற்கு கீழ்ப்படியத் தவறுகிறவர்கள் மீது பிரியமற்றவராக இருக்கிறார். நாம் விசுவாசத்தில் நடக்க விரும்பினால், நாம் தேவனுடைய குரலைக் கவனித்து, அதை அது கூறுகிறபடி செய்து, ஒருக்காலும் அதற்கு அப்பால் செல்லக் கூடாது.*

---

குறிப்புகள்

[1]Jack W. Cottrell, "Restoration and the Word of God," *Christian Standard* 105 (15 November 1970): 1044; quoted in Jack P. Lewis, "New Testament Authority for Music in Worship," in *The Instrumental Music Issue,* ed. Bill Flatt (Nashville: Gospel Advocate Co., 1987), 53. [2]Olan L. Hicks, "Introduction," in Homer Hailey, *Attitudes and Consequences in the Restoration Movement,* 2d ed. (Rosemead, Calif.: Old Paths Book Club, 1952), 7. [3]F. LaGard Smith, *The Cultural Church* (Nashville: 20th Century Christian, 1992), 193. [4]*இந்த வலியுறுத்தத்தின் கூடுதல் சாட்சியத்திற்கு, தீர்க்கதரிசன செய்திக்கான ஒரே சீரான முன்னுரை, "கர்த்தருடைய வார்த்தை … க்கு உண்டாகி" என்றிருந்ததைக் கவனியுங்கள் (1 இராஜாக்கள் 21:17; ஏசாயா 38:4; எரேமியா 1:4, 11, 13; எசேக்கியேல் 6:1; 7:1; யோனா 1:1; ஆகாய் 2:10; சகரியா 1:1). நெகேமியா 8 மற்றும் 9ம் அதிகாரங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளபடி, அடிமைத்தனத்திற்குப் பிந்திய காலத்தில் எஸ்ரா மற்றும் நெகேமியா ஆகியோரால் மேற்கொள்ளப்பட்ட மீளக்கட்டுவித்தலில் இருந்து மதிப்புமிக்க பாடங்கள் கற்றுக்கொள்ளப்படமுடியும்.*